தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தில் மழை வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்




தமிழகம், புதுவையின் சில பகுதிகளில் வெள்ளிக்கிழமை இன்று மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் உள்மாவட்டங்களின் பல இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும். கடலோர மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும். சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டமாக காணப்படும். மாலை அல்லது இரவில் மழை பெய்யும். வெப்பச்சலனத்தின் காரணமாகவே இந்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில் வியாழக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் திருபுவனத்தில் 80 மி.மீ. மழை பெய்துள்ளது. மேட்டூர் (50 மி.மீ.), வேலூர், காங்கேயம், கிருஷ்ணகிரி, ஏற்காடு (40 மி.மீ.), வால்பாறை, திருக்கோவிலூர், தருமபுரி (30 மி.மீ.), பென்னாகரம், சாத்தான்குளம், பாலக்கோடு, சூளகிரி, தளி, விருதாச்சலம், குடியாத்தம் (20 மி.மீ.), ஒகேனக்கல், மதுரை தெற்கு, துறையூர், ஒசூர், நாமக்கல், அருப்புக்கோட்டை, ஓமலூர், ஆரணி, பழனி (10 மி.மீ.) ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது.

### மேட்டூர் அணைக்கு நீர்வரத்து திடீர் அதிகரிப்பு



மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வியாழக்கிழமை திடீரென அதிகரித்தது. அணைக்கு, 19 ஆயிரம் கன அடி வீதம் நீர்வரத்து இருந்தது. கர்நாடகத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால் அங்குள்ள அணைகளிலிருந்து மீண்டும் உபரி நீர் திறந்துவிடப்படுகிறது. இதையடுத்து, மேட்டூர் அணை, ஒகேனக் கல்லுக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. மேட்டூர் அணைக்கு புதன்கிழமை நொடிக்கு 6,852 கன அடியாக இருந்த நீர்வரத்து, வியாழக்கிழமை 19,131 கன அடியாக அதிகரித்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்காகவும் நொடிக்கு 18,900 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 88.60 அடியாக இருந்தது. நீர் இருப்பு 51.06 டி.எம்.சியாக இருந்தது. ஒகேனக்கல்லில்... தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரியில் கடந்த இரு நாள்களாக நீர்வரத்து அதிகரித்து வருகிறது. புதன்கிழமை நொடிக்கு 13,000 கன அடியாக இருந்த நீர்வரத்து, வியாழக்கிழமை 25,000 கன அடியாக அதிகரித்தது. மழை தொடர்ந்தால், நீர்வரத்து மேலும் அதிகரிக்கக் கூடும் என மத்திய நீர் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இன்று விவசாயிகள் குறைதீர்வுக் கூட்டம்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வி.கே. சண்முகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கான குறை தீர்க்கும் கூட்டம் வெள்ளிக்கிழமை (செப்டம்பர் 26) காலை 11.00 மணிக்கு, ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற உள்ளது. ஆட்சியர் தலைமையில் நடைபெற உள்ள இந்தக்

கூட்டத்தில், விவசாயிகள் பெருவாரியாக கலந்து கொண்டு, வேளாண்மைத் துறை, அதன் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கைகளை மனுவாக அளித்து பயன்பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**<u>3 மாதங்களுக்குள் 1,039 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்க முடிவு</u>**

வரும் 3 மாதங்களுக்குள் 1,039 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்க முடிவு செய்துள்ளதாகவும், அக்.2-ம் தேதி முதல் பயனாளிகள் தேர்வு நடைபெறும் எனவும் ஆட்சியர் எஸ்.பிரபாகரன் தெரிவித்துள்ளார். ஈரோடு ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டப் பயனாளிகளை தேர்வு செய்யும் உறுப்பினர்களுக்கான பயிற்சி முகாமில் அவர் பேசியது: அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில் தேர்வு செய்யப்படும் பயனாளி பெண்களாகவும், நிலமற்ற விவசாய கூலியாகவும் இருக்க வேண்டும். பயனாளி சொந்தமாக மாடு, ஆடுகள் எதையும் வைத்திருக்கக் கூடாது. பயனாளி ஏழைகளிலே மிகவும் ஏழையாக இருக்க வேண்டும். இத்தகைய தகுதிகளை உடையவர்களை தான் தேர்வுக் குழுவினர் பயனாளிகளாக தேர்வு செய்ய வேண்டும். தேர்வு செய்யப்படுபவர்களில் 30 சதவீதம் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியலை கிராம சபைக் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெற்று, ஊராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். கிராம சபையில் அங்கீகரிக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியலை கிராம ஊராட்சி அறிவிப்பு பலகையில் விளம்பரப்படுத்த வேண்டும். கடந்த 2011 முதல் 2014-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை 157 ஊராட்சிகளைச் சார்ந்த 15 ஆயிரத்து பத்து பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.19.37 கோடி. வரும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் பி.பாலத்தொழுவு, பேரோடு, சுள்ளிபாளையம், திருவாச்சி, முகாசிபுதூர், நாகலூர், பெருந்தலையூர், மாக்கினாங்கோம்பை, தோரணவாவி, படவல்கால்வாய், மூங்கில்பட்டி, சங்கரபாளையம், புள்ளப்பநாய்க்கன்

பாளையம், நஞ்சைகாலமங்களம், பெரிய கள்ளிப்பட்டி, புங்கூர், நாதிபாளையம், குருமந்தூர் ஆகிய 18 ஊராட்சிகளைச் சார்ந்த 1,039 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்பட உள்ளன. இதற்குரிய முதல் கிராம சபைக் கூட்டம் அக்.2-ம் தேதி நடத்த வேண்டும். 2-வது சிறப்பு கிராம சபைக் கூட்டம் அக்.13,14,15-ம் தேதிகளில் நடத்த வேண்டும். தேர்வுக் குழு உறுப்பினர்கள் தகுதியுள்ள பயனாளிகளை கூராய்ந்து தேர்வு செய்ய வேண்டும் என்றார் ஆட்சியர் பிரபாகரன்.

## நாளை தென்மண்டல அளவிலான தோட்டத் தொழிலாளர்கள் மாநாடு துவக்கம்

தென்மண்டல அளவிலான தோட்டத் தொழிலாளர் சம்மேளன மாநாடு குன்னூரில் சனிக்கிழமை (செப்.27) துவங்குகிறது. இதுகுறித்து சிஐடியு தொழிற்சங்கத்தின் மாவட்டச் செயலர் எல்.தியாகராஜன் கூறியது: தேசிய தொழிற்சங்கத் தலைவர்கள், தமிழகம்,கர்நாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களை சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களும், அவர்களின் பிரதிநிதிகளும் தென்மண்டல தோட்டத் தொழிலாளர்கள் மாநாட்டில் பங்கேற்கின்றனர். இந்த மாநாடு வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற உள்ளது. கஸ்தூரி ரங்கன் அறிக்கையை அரசு நிராகரித்து தோட்டங்கள், கிராமங்கள், தோட்டத் தொழிலாளர்களை பாதுகாக்க வேண்டும். தோட்டத் தொழிலாளர்களுக்கு மாத ஊதியமாக ரூ.15 ஆயிரம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என்றார்.

## உதகையில் இரண்டாம் பருவ விழா தொடக்கம்

உதகையில் 10 நாள்களுக்கு நடத்தப்படும் இரண்டாம் பருவ விழா வியாழக்கிழமை தொடங்கியது. இவ் விழாவை உதகை மரவியல் பூங்காவில் ஆட்சியர் பி.சங்கர் தொடங்கி வைத்தார். நீலகிரி மாவட்டத்தில் கோடை காலம், தென்மேற்கு பருவமழைக் காலம் ஆகியவை முடிந்து, பனிக்காலம் தொடங்குவதற்கு முன்னர் இரண்டாவது சீசன் காலம் தொடங்கும். கோடை காலத்தில் உதகையில் நிலவும் கூட்ட நெரிசலில் இருந்து தப்பிக்க நினைப்பவர்கள் இந்த இரண்டாவது சீசன் காலத்தில் உதகையில் கூடுவர். உதகையில் மரங்களுக்காகவே

பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ள தோட்டக்கலைத்துறையின் மரவியல் பூங்காவில் இவ்விழா நடைபெறுகிறது. விழாவை தொடங்கி வைத்து, ஆட்சியர் பி.சங்கர் பேசியது: உதகையில் இரண்டாம் பருவத்தையும் கொண்டாடும் வகையில், நடப்பாண்டில் இரண்டாம் பருவ விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உதகை மரவியல் பூங்கா பிரபலமடைய வேண்டும் என்பதற்காகவே இவ் விழா இங்கு நடத்தப்படுகிறது. இந்த பூங்காவில் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஆப்பிரிக்கா, மெக்ஸிகோ, பெர்ஷியா போன்ற வெளிநாடு களிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள 107 வகையான மரங்கள் உள்பட மொத்தம் 167 வகைகளிலான மரங்கள் உள்ளன. கிரிக்கெட் மட்டை உருவாக்க பயன்படும் மர வகையும் இங்குள்ளது. இதைத் தவிர, உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் சுமார் 2 லட்சம் மலர் செடிகள் தொட்டிகளில் அடுக்கப்பட்டும், மலர் பாத்திகளில் உருவாக்கப்பட்டும் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டுமின்றி உள்ளூர் மக்களுக்கும் இரண்டாம் பருவ விழா சிறந்த பொழுதுபோக்கு அம்சமாக அமையும் என்றார்.இந் நிகழ்ச்சியில் நீலகிரி மக்களவை உறுப்பினர் சி.கோபாலகிருஷ்ணன், தமிழக தாட்கோ தலைவர் எஸ்.கலைச்செல்வன், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி, உதகை நகர்மன்றத் தலைவர் சத்தியபாமா, மாவட்ட ஊராட்சித் தலைவர் மேனகா, துணைத்தலைவர் பலராமன், உதகை ஊராட்சி ஒன்றியத் தலைவர் சாந்தி, மலைப் பகுதி மேம்பாட்டுத்திட்ட இயக்குநர் ஸ்ரீனிவாச ரெட்டி, மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கர பாண்டியன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். தொடக்க விழாவில் கேரளத்தின் செண்டை மேளம், நீலகிரியின் தோடர் மற்றும் படகர் இன மக்களின் பாரம்பரிய நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மாவட்ட சுற்றுலா அலுவலர் துரைராஜ் நன்றி கூறினார்.

## <u>கறவை மாடுகளில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் தனுவாசு தாதுக் கலவை</u>

திருநெல்வேலி மாவட்டத்தில் கறவை மாடுகளில் ஏற்படும் குறைகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்காக கால்நடை மருத்துவக் கல்லூரி சார்பில் தனுவாசு தாதுக்கலவை பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது. திருநெல்வேலியை அடுத்த மேலச்செவல் கிராமத்தில், கறவை மாடு வளர்ப்போருக்கு இடையே தனுவாசு தாதுக்கலவையை பிரபலப்படுத்தும் திட்ட விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. முகாமுக்கு தலைமை வகித்து கல்லூரி முதல்வர் செ. பிரதாபன் பேசியது: கறவை மாடு வளர்ப்புத் தொழிலில் நவீன தொழில்நுட்பங்களை புகுத்தி வருமானத்தை அதிகரிக்கும் வகையில் மாவட்டம் முழுவதும் கல்லூரி மூலம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வில், பெரும்பாலான கறவை மாடுகள் உரிய காலத்தில் பருவத்துக்கு வருவதில்லை எனவும், சினை பிடிப்புத் திறன் குறைவாக இருப்பதும், பால் உற்பத்தி குறைந்து இருப்பதும் தெரியவந்தது. இதையடுத்து, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் நவீன தொழில்நுட்பங்களின் ஒன்றான தனுவாசு தாது உப்புக் கலவையை மாடுகளுக்கு அளித்து பரிசோதனை செய்ததில் இந்த குறைகள் அனைத்தும் நிவர்த்தியாகி பால் உற்பத்தியும் அதிகரித்தது நிரூபணமானது. எனவே, தனுவாசு தாதுக் கலவையை மாவட்டம் முழுவதும் உள்ள கறவை மாடு வளர்ப்போருக்கு இடையே கொண்டு செல்லும் வகையில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. அதிக சத்துக்கள் நிறைந்த இந்த கலவையை மாட்டுத் தீவனத்திலோ, தண்ணீரிலோ கலந்து அளிக்கும்போது பருவத்துக்கு வராத மாடுகள், சினைக்கு வராத மாடுகளின் பிரச்னைகளுக்கு உடனடித் தீர்வு கிடைக்கிறது. பாலின் உற்பத்தி அதிகரிப்பதுடன், கொழுப்புச் சத்து அதிகமாகி நல்ல வருவாயும் கிடைக்கும் என்றார். முகாமில், இதுகுறித்த துண்டுப் பிரசுரங்களை தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் துணைப் பொது மேலாளர் கே. ராமலிங்கம் வெளியிட்டார். கால்நடை பண்ணை வளாகத் தலைவர் வெ. தனசீலன், கால்நடை ஊட்டச்சத்துயியல் தலைவர் ம. செல்லப்பாண்டியன், விரிவாக்க கல்வித் துறை தலைவர் சி. மணிவண்ணன் ஆகியோர் பேசினர். முகாமில், 50 பயனாளிகளுக்கு தனுவாசு தாது உப்புக் கலவை வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை, திட்ட முதன்மை ஆராய்ச்சியாளர் சே. செந்தில்குமார் மற்றும் கல்லூரி நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

## பெங்களூருவில் பலத்த மழை

பெங்களூருவில் கடந்த இரண்டு நாள்களாக பெய்து வரும் பலத்த மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. பெங்களூரு மாநகரில் இரவு நேரங்களில் கடந்த இரண்டு நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. பல இடங்களில் தாழ்வானப் பகுதிகளில் தண்ணீர் புகுந்ததால், மக்கள் அவதிக் குள்ளாகியுள்ளனர். கடந்த 48 மணி நேரத்தில் பெங்களூருவில் 11 மி.மீட்டர் மழை பெய்தது. இந்த நிலையில், பெங்களூருவில் வியாழக்கிழமை மாலை 4 மணி முதல் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது. இதனால், அலுவலகங்களில் இருந்து வீடு திரும்ப முடியாமல் பலர் அவதிப்பட்டனர். சாலைகளில் தண்ணீர் தேங்கியதால் வாகனங்கள் செல்ல முடியாமல் தவித்தன. இதனால், பல இடங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டன. ஜெயநகர், சிவாஜிநகர், கோரமங்களா, சாந்திநகர், குமாரசாமி லேஅவுட், சேஷாத்திரிபுரம், மல்லேஸ்வரம், வி.வி.புரம், மகாத்மாகாந்திசாலை, கன்னிங்கம்சாலை, பழைய மெட்ராஸ் சாலை, மாகடிசாலை, ராஜாஜிநகர், மைசூர் சாலை, சிவானந்தசாலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சாலைகளில் தண்ணீர் தேங்கியதால் வாகனங்கள் செல்ல முடியாமல் திணறின.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## பசுந்தேயிலை விலை உறுதிப்பாட்டு நிதி முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை :'சிறு தேயிலை விவசாயிகள், தேயிலை விலை வீழ்ச்சியால் பாதிக்கப்படுவதை தடுக்க, 'பசுந்தேயிலை விலை உறுதிப்பாட்டு நிதி' உருவாக்கப்படும்' என, முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். அவரது அறிக்கை:கடந்த 2005ல், நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு தேயிலை விவசாயிகளுக்கு, சிறு தேயிலை விவசாயிகள் பாதுகாப்பு திட்டம் மூலம், 28 கோடி ரூபாய், மானியம் வழங்கப்பட்டது.கடந்த, மூன்று ஆண்டுகளில், 22 ஆயிரம் பேர்

பயன்பெறும் வகையில், 24.16 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது, சர்வதேச அளவில் நிலவி வரும், தேயிலை விலை வீழ்ச்சியால், நீலகிரி மாவட்டத்தில் உள்ள, 22 ஆயிரம் தேயிலை விவசாயிகள், பாதிப்பிற்குள்ளாகி உள்ளனர்.எனவே, அவர்களுக்காக,'பசுந்தேயிலை விலை உறுதிப்பாட்டு நிதி' ஒன்றை, நிரந்தரமாக ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளேன்.இந்நிதிக்கு, நடப்பாண்டு, தமிழக அரசு சார்பில், எட்டு கோடி ரூபாய்; 'இண்ட்கோசர்வ்' சார்பில், 40 கோடி ரூபாய் வழங்கப்படும்.ஒவ்வொரு ஆண்டும், 'ஊட்டி டீ' திட்டம் மூலம் ஈட்டும் லாபத் தொகையில், 75 சதவீதத்தை, 'இன்ட்கோசர்வ்' நிறுவனம், பசுந்தேயிலை விலை உறுதிப்பாட்டு நிதிக்கு வழங்கும். மீதமுள்ள நிதியை, தமிழக அரசு வழங்கும்.இந்த நிதியில் இருந்து, தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில், ஒவ்வொரு மாதமும், பசுந்தேயிலைக்கு நிர்ணயிக்கப்படும் விலை, தேயிலை வாரியம் நிர்ணயிக்கும், குறைந்தபட்ச விலையை விடக் குறைந்தால், சிறு தேயிலை விவசாயிகளுக்கு, பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு, இரண்டு ரூபாய்க்கு மிகாமல், கூடுதல் ஆதார விலை வழங்கப்படும்.இதன் மூலம், 22 ஆயிரம் பேர் நிரந்தரமாக பயன்பெறுவர்.இவ்வாறு, முதல்வர் ஜெயலலிதா தெரிவிக்துள்ளார்.

**<u>காய்கறிகள் விற்பனை அதிகரிப்பு</u>**

பழநி : புரட்டாசி மாதம் என்பதால், காய்கறி வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக, சந்தையில் காய்கறிகளின் விற்பனை சூடுபிடித்துள்ளது. தமிழ் மாதமான புரட்டாசியில் பெருமபாலானவர்கள் அசைவக்கை உட்கொள்வகில்லை. காய்கறிகளுக்கே முக்கியத்துவம் அளிப்பர் என்பதால் வாரச்சந்தை மற்றும் உழவர் சந்தைகளில் விற்பனை அதிகரித்துள்ளது. தேவைக்கேற்ப, காய்கறிகளின் வரத்து இல்லாததால் விலை உயர்ந்துள்ளது. உழவர்சந்தைகளில் பகல் 12 மணி வரை விற்பனை நடைபெறும். புரட்டாசி துவங்கியதிலிருந்து காலை 8 மணிக்கே விற்பனை முடிந்து விடுகிறது. காய்கறிகளின் விலை நிலவரம் வருமாறு: தக்காளி முதல் ரகம் கிலோ ரூ.14, அவரை ரூ.20, கோஸ் ரூ.20, கேரட் ரூ. 46, உரு ளை 40, வெங்காயம் 30, பெல்லாரி 25, முருங்கை 30, கத்திரி 18,

வெண்டை 12, பீட்ரூட் 24 க்கும் விற்பனை செய்யப்படுகிறது. உழவர் சந்தை அதிகாரி ஒருவர் கூறுகையில் ," புரட்டாசி முதல் நாளிலிருந்து சந்தையில் கூட்டம் அதிகரித்துள்ளது. போதிய விளைச்சல் இல்லாததால் சந்தைக்கு வரும் காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது. தினமும் 15 டன் காய்கறிகள் விற்பனைக்காக கொண்டுவரப்படும். தற்போது, 13 டன் மட்டுமே வருகிறது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் உழவு பணிகளில் கவனம் செலுத்த துவங்கியுள்ளனர். இதனால், அவர்களின் எண்ணிக்கையும் குறையத்துவங்கியுள்ளது. கேரட், உருளை, சோயா, பட்டர்பீன்ஸ் காய்களின் விலை அதிகரித்துள்ளது,' என்றார்.

## ஆடு, மாடு மற்றும் கோழிகளுக்கு இலவச கொட்டகை! அக்டோபர் 1 முதல் செயல்படுத்த முடிவு

திருத்தணி : விவசாயிகள் வளர்க்கும் ஆடு, மாடு மற்றும் கோழிகளுக்கு, அரசின் மூலம், இலவச கொட்டகை அமைக்கும் பணியை, வரும் அக். 1ம் தேதி முதல், செயல்படுத்த கால்நடை துறை முடிவு செய்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில், திருத்தணி, திருவள்ளூர், பொன்னேரி ஆகிய மூன்று கால்நடை துறை உதவி கோட்டத்தில், 2.77 லட்சம் மாடுகள், 5.20 லட்சம் ஆடுகள் மற்றும் 5.15 லட்சம் கோழிகள் உள்ளன. **முதல்வர் அறிவிப்பு** : ஆடு, மாடு மற்றும் நாட்டுக் கோழிகள் வளர்க்கும் விவசாயிகளுக்கு, அரசின் மூலம், இலவச கொட்டகை அமைத்து தரப்படும் என, முதல்வர் ஜெயலலிதா சட்டசபையில், கடந்த ஜூலை 25ம் தேதி அறிவித்தார். இத்திட்டம், முதன் முறையாக அமல்படுத்தப்பட உள்ளது.இதற்கான அரசாணையை வெளியிட்டு, கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள் மூலம், விவசாயிகளுக்கு விண்ணப்பங்களை வழங்கி வருகிறது. பூர்த்தி செய்த விண்ணப்பங்களை, விவசாயிகளிடம் இருந்து கால்நடை துறையினர் வாங்கி, மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பி வைப்பர். பின்னர், அந்த விண்ணப்பங்கள், அந்தந்த ஒன்றிய அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பங்களை, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி செயலர், ஆவின் துறை உதவி ஆய்வாளர் மற்றும் கால்நடை துறை

ஆய்வாளர் ஆகியோர் கொண்ட குழு, விண்ணப்பித்த விவசாயிகள் இருக்கும் இடத்திற்கு சென்று, கால்நடைகள் வளர்த்து வருகிறார்களா, வீட்டருகே கொட்டகை அமைக்க போதிய சொந்த நிலம் உள்ளதா என, ஆய்வு செய்யும். பின்னர், தகுதியானவர்களின் பட்டியலை தயாரித்து, திட்ட அலுவலர் மூலம், ஆட்சியருக்கு அனுப்பி, நிர்வாக அனுமதி பெறப்படும். கொட்டகை அமைக்கும் பணியில், நூறு நாள் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவர். மேலும், ஊராட்சி நிர்வாகம் கொட்டகை அமைக்கும் பணியை, வட்டார வளர்ச்சி அலுவலர் மேற்பார்வையிடுவார். பணிகள் முடிந்தபின், சம்பந்தப்பட்ட விவசாயிகளிடம் கொட்டகை ஒப்படைக்கப்படும்.

**ஆவின் துறை மூலமும்...** மாட்டு கொட்டகை அமைப்பதற்கு, இரண்டு மாடுகளுக்கு, 79 ஆயிரம் ரூபாய் என, மாடுகள் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, அதிகபட்சமாக 10 மாடுகளுக்கு, 2.15 லட்சம் ரூபாய் வழங்கப்படும். ஆவின் துறை மூலம், பயனாளிகளுக்கு, 200 மாடுகள் வழங்கப்படும். அதே போல், 10 ஆடுகளுக்கு, 85 ஆயிரம் ரூபாய் என, எண்ணிக்கைக்கு ஏற்றவாறு 30 ஆடுகள் வரை, 1.80 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.இதே போல், 100 நாட்டுக் கோழிகளுக்கு 77 ஆயிரம் ரூபாய் என, அதிகபட்சமாக 250 கோழிகளுக்கு, 1.03 லட்சம் ரூபாய் கொட்டகை அமைக்க இலவசமாக வழங்கப்படும்.

**வரும் 30க்குள்...** இதுகுறித்து, மாவட்ட கால்நடை துறை இணை இயக்குனர் பன்னீர்செல்வம் கூறியதாவது:மாடு, ஆடு மற்றும் கோழிகளுக்கு கொட்டகை அமைப்பதற்கு, தகுதியான விவசாயிகள், வரும் 30ம் தேதிக்குள் விண்ணப்பங்களை, அந்தந்த கால்நடை துறை மருந்தகம், கிளை நிலையங்களில் ஒப்படைக்க வேண்டும்.விண்ணப்பங்கள், எங்கள் துறையின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு, மாவட்ட திட்ட அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படும். பின்னர், தகுதியான பயனாளிகளை தேர்வு செய்து, கொட்டகை அமைத்து தருவது போன்ற பணிகளை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மேற்கொள்வர். வரும் அக்.1 முதல், இத்திட்டம் செயல்படுத்தப் படும்.இவ்வாறு அவர் கூறினார். பயன் பெறும் பயனாளிகள் கால்நடை துறை ஆவின்துறை மாடு 400 ஆடு 350 கோழி 30

## சங்கராபுரத்தில் கன மழை

சங்கராபுரம்: சங்கராபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடியுடன் கூடிய கன மழை பெய்தது. நேற்று முன் தினம் இரவு 11 மணிக்கு துவங்கிய மழை நேற்று அதிகாலை 4 மணி வரை பெய்தது. இதனால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழையால் விவ சாயிகள் மற்றும் பொது மக் கள் மகிழ்ச்சியடைந் தனர்.

## ஏற்காட்டில் கனமழை விவசாயிகள் மகிழ்ச்சி

ஏற்காடு: ஏற்காட்டில் கன மழை கொட்டியதால், பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். ஏற்காடு டவுன், ஜெரீனாக்காடு, லாங்கில் பேட்டை, முருகன் நகர், எம்.ஜி.ஆர். நகர், நாகலூர், அசம்புர், மஞ்சக்குட்டை, வெள்ளக்கடை உள்ளிட்ட பல இடங்களில், மூன்று நாட்களாக கனமழை பெய்து வருகிறது. நேற்று மதியம் பெய்த கன மழையால், சாலை ஓரங்களில் மழை நீர், வெள்ளம் போல் ஓடியது. வறண்டு கிடந்த ஆறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓட துவங்கியுள்ளது. தொடர் மழையால், இந்தாண்டு அனைத்து வித பயிர்களும் நன்கு விளைந்து அதிகளவில் மகசூல் கிடைக்கும் என, விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். நேற்று ஏற்காட்டில் பெய்த மழையின் அளவு 46 மில்லி மீட்டராக பதிவாகியிருந்தது.

## தர்மபுரி விவசாயிகள் மகிழ்ச்சி மூன்று நாட்களாக தொடர் மழை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து, மூன்று நாட்களாக பரவலாக மழை பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டம், விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம். தென்மேற்கு பருவமழையை நம்பி, விவசாயிகள் சில மாதங்களுக்கு முன், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், மானாவாரியாக ஹெக்டரில், கேழ்வரகு, சாம்பை, மரவள்ளி கிழங்கு, நிலக்கடலை மற்றும் சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்தனர். இந்நிலையில், மாவட்டத்தில், இந்தாண்டு தென்மேற்கு பருவமழை சராசரி அளவை விட குறைவாக பெய்தது. குறிப்பாக, இரண்டு மாதமாக பருவமழை ஏமாற்றி வந்ததால், விவசாயிகள் சாகுபடி செய்திருந்த

பயிர்கள் வாடி வந்தது. நிலக்கடலை செடிகள், பால் பிடிக்கும் பருவத்தில், தண்ணீர் இன்றி வாடியது. இந்நிலையில், தர்மபுரி மாவ்டடத்தில், மூன்று நாட்களாக தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருவதாலும், வாடிய பயிர்கள் உயிர் பிடித்து வளர தொடங்கியதாலும், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக, அப்பகுதிகளில் உள்ள நீர் நிலைகளிலும், மழை நீர் தேங்கி வருகிறது. தமிழக, கர்நாடகா எல்லை பகுதியில் பெய்த மழையின் காரணமாக, நேற்று, ஒகேனக்கல் காவிரி ஆற்றில், வினாடிக்கு, 25 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது. இதனால், ஒகேனக்கல் காவிரி ஆறு மற்றும் அருவியில் செந்நிறத்தில் தண்ணீர் ஓடியது. நேற்று முன்தினம் மாவட்டத்தில் அதிகபட்சமாக, தர்மபுரியில், 25 மி.மீ., மழை பதிவானது. பென்னாகரம் 24 மி.மீ., பாலக்கோடு, 21.20 மி.மீ., கலெக்டர் அலுவலகத்தில், 20 மி.மீ., ஒகேனக்கல், 15.40 மி.மீ., பாப்பிரெட்டிப்பட்டி, 13.10 மி.மீ., மாரண்டஹள்ளி, 8 மி.மீ., அரூர், 7.30 மி.மீ., மழையளவு பதிவானது. மாவட்டத்தில், சராசரியாக, 16.29 மி.மீ., மழையளவு பதிவானது.

## 30ம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

தர்மபுரி: வரும், 30ம் தேதி, தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடக்கிறது. இதுகுறித்து, கலெக்டர் விவேகானந்தன் வெளியிட்ட அறிக்கை: மாவட்டத்தில் உள்ளாட்சி இடைத்தேர்தல் காரணமாக, நன்னடத்தை விதிகள் அமலில் இருந்தது. இதனால், பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் உள்ளிட்ட பல்வேறு கூட்டங்கள் நடத்தப்படாமல் இருந்தது. இந்நிலையில், உள்ளாட்சி இடைத்தேர்தல் நன்னடத்தை விதிகள், 23ம் தேதியுடன் தளர்த்தப்பட்டது. எ னவே, தர்மபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும், 30ம் தேதி காலை 11 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்டரங்களில் நடக்கிறது. இதில், மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று, விவசாயம் தொடர்பான தங்களது குறைகளை தெரிவிக்கலாம். இவ்வாறு, அவர் கூறியுள்ளார்.

## ரூ.15 லட்சம் மதிப்பில் கொப்பரை தேங்காய் ஏலம்

கோபி: கோபி, ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 354 தேங்காய் பருப்பு மூட்டைகள், 15 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், கொப்பரை தேங்காய் ஏலம், நேற்று நடந்தது. ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், ஏராளமான விவசாயிகள், கொப்பரை தேங்காயை, ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர். மொத்தம், 88 விவசாயிகள், பத்து வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்றனர். ஒரு கிலோ கொப்பரை தேங்காய் பருப்பு, 101.39 முதல், 104.33 ரூபாய்க்கும் விலை போனது. மொத்தம், 354 மூட்டைகள், 15 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனதாக, கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகேந்திரசிங் தெரிவித்தார்.

## ஒற்றை பயிர் நடவில் அதிக மகசூல் வேளாண் உதவி இயக்குனர் தகவல்

ஈரோடு: விவசாயத்தில், செம்மை நெல் சாகுபடியில், ஒற்றை பயிர் நடவில், விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம், என, வேளாண் உதவி இயக்குனர் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார். இது குறித்து, உதவி இயக்குனர் கார்த்திகேயன் கூறியதாவது: அம்பாசமுத்திரம் நெல் வகையான ஏ.எஸ்.டி., 38, 39 என்ற வகை பயிர்களை, நாற்றங்காலில் இருந்து, இளம்நாற்றாக, 14 நாட்களில் பிடுங்கி நடவு செய்ய வேண்டும். இவ்வகை பயிர்கள், 130 நாட்கள் முதல், 135 நாட்கள் வரை, அறுவடைக்கு தயாராகி விடும். தற்போது, ஈரோடு மாவட்டத்தில், 300 டன்னுக்கு மேல், விதை நெல் விற்பனையாகி உள்ளது. விவசாயிகள் ஆர்வமுடன் வாங்கி, இவ்வகை பயிரினை பயிரிட்டுள்ளனர். ஏக்கருக்கு, மூன்று கிலோ நெல் விதையில் இருந்து நாற்று விட்டாலே, போதுமானது. ஏக்கருக்கு, பத்து குவிண்டால் மகசூல் பெறலாம். பயிர் மட்டும் நடவு செய்தால் போதாது. பராமரிப்பு பணிகளும் அவசியம். சரியான நேரத்தில் களை எடுத்தல், உரமிடுதல், தண்ணீர் விடுதல் என கவனித்து வரவேண்டும். ஒரு குவிண்டால், 2,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஒற்றை பயிராக நடவு செய்ய வேண்டும். முக்கால் அடிக்கு ஒரு பயிர்

வீதம் நட்டாலே, ஒரு பயிருக்கு, 80 தூர்கள் விடும். அதற்கு, இந்த இடைவெளி தேவை. இந்த நெல் விதை அனைத்து வேளாண் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும். தற்போது, ஈரோடு மாவட்டத்தில், 75,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது, ஈரோடு மாவட்டத்தில் தாளவாடி, கீழ்பவானி, காலிங்கராயன் பாசனப்பகுதிகள், என, சாகுபடியான பல இடங்களில், இப்பயிர்கள் செழிப்பாக உள்ளது. இதனால், விவசாயிகள், நல்ல மகசூலை எதிர்பார்த்து காத்துள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

## முத்தூரில் அதிகபட்ச மழைப்பதிவு

ஈரோடு; ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், கடந்த மூன்று நாட்களாக, இரவு நேரத்தில், மழை கொட்டி வருகிறது. நேற்று முன்தினம் ஓரளவு மழை பெய் தது. தொடர் மழையால் குளம், குட்டை உட்பட நீர் நிலைகளில், நீர் தேங்க துவங்கி உள்ளது. ஈரோடு மாவட்டத்தில், எலந்தகுட்டைமேடு,2 மி.மீட்டர், கவுந்தப்பாடி,7.8, ஈரோடு,2, மொடக்குறிச்சி,20, அரச்சலூர்,13, சென்னிமலை,7, சிவகிரி,45, முத்தூர்,63, மங்களப்பட்டி,25, கொடுமுடி,20, காங்கேயம்,46.2, ஒரத்துப்பாளையம் அø ண,4, என மழையளவு பதிவானது. தொடர் மழையால், விவசாயிகள், கால்நடை வளர்ப்போரிடையே மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சத்தியமங்கலம், கொடிவேரி, கோபி உள்ளிட்ட பகுதிகளில், நேற்று முன்தினம் மழை பெய்யவில்லை.

## விலையில்லா ஆடுகள் வழங்கல்

கோத்தகிரி : கோத்தகிரி நடுஹட்டி ஊராட்சிக்கு உட்பட்ட பெத்தளா கிராமத்தில், தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா நடந்தது. நடுஹட்டி ஊராட்சி தலைவர் சவுந்திரராஜன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் குள்ளன் மற்றும் கவுன்சிலர் ரமேஷ் ஆகியோர், முன்னிலை வகித்தனர். கோத்தகிரி ஊராட்சி ஒன்றிய தலைவர் (பொறுப்பு) மணிமனோகரன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, 70 பயனாளிகளுக்கு, 280 விலையில்லா ஆடுகள் வழங்கி, அரசின்

திட்டங்கள் குறித்து பேசினார்.ஊராட்சி உதவியாளர் செல்லதுரை நன்றி கூறினார்.

**<u>ஊட்டியில் கோலாகலமாக துவங்கியது இரண்டாம் 'சீசன்'! மக்கள் பார்ப்பதற்கு 2 லட்சம் மலர்ச்செடிகள் தயார்</u>**

ஊட்டி : ஊட்டியில், இரண்டாவது சீசனுக்கான விழா நேற்று துவங்கியது; தாவரவியல் பூங்காவில், 2 லட்சம் மலர் செடிகள், பார்வையாளர்களை பரவசப்படுத்த தயாராக உள்ளன. நீலகிரி மாவட்டம் ஊட்டியில் இரண்டாவது சீசன் நிகழ்ச்சிகள் நேற்று துவங்கின. மரவியல் பூங்காவில் நடந்த நிகழ்ச்சியில், நீலகிரி தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி வரவேற்றார்.நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமை வகித்து பேசுகையில்,“சுற்றுலா பயணிகள் பார்வையில் அதிகம் படாத, மரவியல் பூங்காவில், 167 வகையை சேர்ந்த அரிய வகை மரங்கள் உள்ளன. குறிப்பாக, கிரிக்கெட் மட்டை தயாரிக்க பயன்படும் 'வில்லோ' மரங்கள் அதிகளவில் உள்ளன. பூங்காவுக்கு வரும் பார்வையாளர்களை பரவசப்படுத்த, 2,000 தொட்டிகளில், மலர் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன,” என்றார். இதேபோன்று, ஊட்டி தாவரவியல் பூங்காவின் முகப்பு பகுதியில், அடுக்கி வைக்கப்பட்டுள்ள, 5,500 மலர் தொட்டிகளில், டேலியா, டெல்பீனியம், இன்காமேரி கோல்டு, பிரஞ்சு மேரி கோல்டு, பேன்சி, பெகோனியா, டெய்சி, காலண்டுலா, டயன்தாஸ், ஆஸ்டர், பால்சம், சைக்லமன் உட்பட, 2 லட்சம் மலர் செடிகள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டன.முகப்பு புல் தரையில், 2,500 கார்னேஷன் மலர்களால் உருவாக்கப்பட்ட முயலின் தோற்றம் பார்வையாளர்களை மகிழ்விக்கும். இந்த மலர்களின் இந்த அணிவகுப்பு ஒரு மாதம் காலம், பார்வைக்கு வைக்கப்படும்' என, பூங்கா நிர்வாகம் தெரிவித்தது. இந்த நிகழ்சியில், 'தாட்கோ' தலைவர் கலைச்செல்வன் முன்னிலை வகித்தார். நீலகிரி எம்.பி., கோபாலகிருஷ்ணன், மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குனர் சீனிவாச ரெட்டி, ஊட்டி நகராட்சி தலைவி சத்தியபாமா உட்பட பலர் பேசினர். தொடர்ந்து, செண்டை மேளம், படுகரின மக்களின் நடனம், இன்னிசை நிகழ்ச்சி ஆகியவை நடத்தப்பட்டன.

**<u>சம்பா சாகுபடி முனைப்பு இயக்க முகாம்</u>**

தொட்டியம்: தொட்டியம் வட்டார வேளாண்மைத்துறை சார்பில், சம்பா சாகுபடி முனைப்பு இயக்க முகாம், திருநாராயணபுரம் கிராமத்தில் உள்ள, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத்தில் நடந்தது. முகாமிற்கு, அரசலூர் பஞ்சாயத்து துணைத்தலைவர் முருகானந்தம் முன்னிலை வகித்தனர். கூட்டுறவு வங்கித்தலைவர் சங்கர் தலைமை வகித்தார். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செயல்படும் அக்ரி கிளினிக் பொறுப்பாளர் பாலமுருகன் மண் ஆய்வு, மண் பரிசோதனை, அடிப்படையில் உரமிடுதல் அதன் அவசியம் குறித்து விளக்கமளித்தார். தொட்டியம் வேளாண் அலுவலர் வேல்முருகன், வேளாண்மைத் துறையில் செயல்படுத்தும் அனைத்து மானிய திட்டங்கள் மற்றும் சம்பா சாகுபடிக்கு தேவையான சான்று பெற்ற நெல் விதைகள், உயிர் உரங்கள், நெல் நுண்சத்துக்கள் ஆகியவற்றை எடுத்துரைத்தார். தொட்டியம் மற்றும் காட்டுப்புத்தூர் வேளாண்மை விற்பனை நிலையங்களில் போதுமான அளவில் இருப்பில் உள்ளதாகவும் அவற்றை விவசாயிகள் மானிய விலையில் பெற்று சம்பா சாகுபடி செய்யுமாறு கேட்டுக் கொண்டார். உதவி வேளாண்மை அலுவலர் மாசிலாமணி திருந்திய நெல் சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய முக்கிய தொழில்நுட்பங்கள் பற்றியும் நெல் விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பித்தார். இம்முனைப்பு முகாமிற்கான முன்னேற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ஆசைதம்பி மற்றும் கார்த்திக் ஆகியோர் செய்திருந்தனர்.

## துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.1.45 சின்ன வெங்காயம் வாழைத்தார் ஏலம்

திருச்சி: துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், 33 ஆயிரத்து, 892 ரூபாய் மதிப்பிலான சின்னவெங்காயம், திருச்செந்துறை வணிக வளாகத்தில், ஒருலட்சத்து, 15 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான வாழைத்தார் ஆகியவை நேற்று ஏலம் போனது. திருச்சி மாவட்டம் துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு, உப்பிலியாபுரம், பி. மேட்டூர், வடக்கிப்பட்டி, கீரம்பூர் ஆகிய பகுதிகளில் இருந்து, 41 மூடைகளில், 2,917 கிலோ சின்ன வெங்காயம் ஏலத்துக்கு வந்தது. அதிகப்பட்சமாக ஒரு கிலோ சின்ன வெங்காயம், 15.50 பைசாவுக்கும், சராசரியாக 11

ரூபாய்க்கும் ஏலம் போனது. சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏழு விவசாயிகள் பங்கேற்றனர். நாமக்கல், மன்னார்குடி, அம்மாப்பாளையம், துறையூர் ஆகிய பகுதிகளில் இருந்து, 12 வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்றனர். திருச்சி அருகே திருச்செந்துறை வாழை வளாகத்தில் நடந்த ஏலத்துக்கு, கரூர் மாவட்டடம் குளித்தலை, தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு, ஈச்சாங்கோட்டை, திருச்சி, அந்தநல்லூர், ஜீயபுரம் ஆகிய இடங்களில், 12 விவசாயிகள், 532 வாழைத்தார்களை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். பூவன், ரஸ்தாளி, மொந்தன், கற்பூரவள்ளி உள்ளிட்ட வாழைத் தார்கள் அதிகளவில் இருந்தது. 11 வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்றனர். அதிகப்பட்சமாக ஒரு வாழைத்தார் 525 ரூபாய்க்கும், சராசரியாக 215 ரூபாய்க்கும் ஏலம் போனது. ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பில் ஏலம் போனது. இருவேறு இடங்களில் நடந்த ஏலத்தில் ஒரு லட்சத்து, 45 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது குறிப்பிடத்தக்கது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம், செப்.,30ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ வெளியிட்ட அறிக்கை: திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் இன்று (26ம்தேதி) மாதாந்திர விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடப்பதாக இருந்தது. ஆனால், இரண்டாண்டு ஆய்விற்காக வருவாய் நிர்வாக ஆணையர் திருச்சிக்கு வருகிறார். இதனால், இன்று நடைபெறவிருந்த , மாதாந்திர விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 30 ம் தேதிக்கு, ஒத்தி வைக்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பெரம்பலூரில் 9,178 விவசாயிகளின் நிலங்களில் மண் பரிசோதனை

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள விவசாய நிலங்களில் மண் பரிசோதனை செய்ய, தமிழக அரசால் நவீன நடமாடும் வாகனம், 40 லட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. இந்த வாகனத்தில் மண்ணின் அமில, காரத்தன்மை, உப்பு அளவு மணிச்சத்து, சாம்பல் சத்து மற்றும் நுண்ணூட்ட சத்துக்களின் அளவை தெரிந்துகொள்ள கருவிகள் உள்ளன. ஆர்கானிக் கார்பன் முறை மூலம் விவசாய நிலங்களின் மண்ணில் உள்ள

தழைச்சத்தின் அளவு கண்டறியப்பட்டு, விவசாயிகளுக்கு தெரிவிக்கப் படுகிறது. நடமாடும் மண் பரிசோதனை வாகனம் கிராமங்களுக்கு வரும் போது, வயலின் சர்வே எண், 2 ஃபாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோக்கள், வங்கி கணக்கு எண் ஆகியவற்றுடன், 500 கிராம் மண்ணுடன் மண் ஆய்வுக்கட்டணமாக, 20 ரூபாய் செலுத்தினால், மண் தன்மை குறித்த மண்வள அட்டையை உடனடியாக பெற்றுக்கொள்ளலாம். விதைப்பு மற்றும் நடவு காலங்களில் தொடர்ச்சியாக கிராமப் பகுதிகளுக்கு சென்று மண் பரிசோதனை செய்யப்படுகிறது. பெரம்பலூர் வட்டாரத்தில், 16 கிராமங்களில் நடந்த முகாமில் 1,714 விவசாய நிலங்களின் மண் மாதிரிகளும், ஆலத்தூர் வட்டாரத்தில், 22 கிராமங்களில் நடந்த முகாமில், 2,441 விவசாய நிலங்களின் மண் மாதிரிகளும், வேப்பந்தட்டை வட்டாரத்தில், 20 கிராமங்களில் நடந்த முகாமில், 2,865 விவசாய நிலங்களின் மண் மாதிரிகளும், வேப்பூர் வட்டாரத்தில், 21 கிராமங்களில் நடந்த முகாமில், 2,158 விவசாய நிலங்களின் மண் மாதிரிகளும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதில் மொத்தம், 9,178 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். எனவே விவசாயிகள் மண்ணின் வளம் குறித்து பரிசோதனை செய்ய விரும்பினால், அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

## விவசாயிகள் தானிய கிடங்கி அமைக்க அரசு மானியத்துடன் வங்கி கடனுதவி

டுமின்றி மாவட்ட நிர்வாகமும் தயாராக உள்ளதாக கலெக்டர் சுப்பையன் உறுதியளித்துள்ளார். நபார்டு வங்கியின் சார்பில், தஞ்சை மாவட்ட தொழில் மைய வளாகத்தில் கிடங்குகள் வளர்ச்சி மற்றும் திட்டங்கள் குறித்த கருத்தரங்கை துவக்கி வைத்து, கலெக்டர் பேசியதாவது:

நாடு முழுவதும் உள்ள தானிய சேமிப்பு துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன் மத்திய அரசு மாற்றத்தக்க கிட்டங்கி ரசீது முறையை அறிமுகப்படுத்தி உள்ளது. ஏற்கனவே கிடங்குகள் சட்டம் நடைமுறையில் உள்ளது. இதன் நோக்கம் கிடங்குகளின் வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை செய்வது, கிட்டங்கி ரசீதை மாற்றத்தக்கதாக ஆக்குவது, கிடங்குகள் வளர்ச்சி மற்றும் ஒழுங்கு முறை ஆணையத்தை அமைப்பது போன்றதாகும். கிடங்குகள் வளர்ச்சி மற்றும் ஒழுங்கு முறை சட்டத்தின்

கீழ் பதிவு செய்யப்பட்ட கிடங்குகள் மூலம் அளிக்கப்படும் மாற்றத்தக்க ரசீதை கொண்டு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகள் தானிய ஈட்டு கடன் பெறலாம்.

இதன்மூலம் உற்பத்தி செய்யும் தானியங்களை அவசரமாக விற்பனை செய்ய வேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்படாது. வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்பீட்டு நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு கிட்டங்கி ரசீது முறை மிகவும் பயனுள்ளதாக அமையும். தானியத்தை சேமிப்பதன் மூலம் அறுவடை காலத்தில் மந்தமான வர்த்தக நிலையிலிருந்து விடுபடவும் வாய்ப்பு உள்ளது. சந்தைகளில் தானியங்களின் விலை நிலவரத்தை அறிந்துகொள்ளலாம். இதன்மூலம் இடைதரகர்கர் முறை ஒழியவும் வாய்ப்பு உள்ளது. கிட்டங்கிளில் சேமிக்கப்படும் பொருட்கள் காப்பீடு செய்யப்படுவதால் தரம் மற்றும் அளவு குறைந்தாலும் வருவாய் இழப்பு ஏற்படாது. நுகர்வோர்களுக்கு தரம் மற்றும் அளவு குறித்த உத்தரவாதத்தை தருகிறது. தஞ்சாவூரில் இரண்டு லட்சம் மெ.டன் உணவு தானியங்களை சேமித்து வைப்பதற்கான கிட்டங்கிகளே உள்ளது. இவற்றின் எண்ணிக்கைகளை அதிகரித்து, நான்கு லட்சம் மெ.டன் உணவு தானியங்களை சேமிக்கும் நிலை உருவாக வேண்டும். இதற்காக ஒருங்கிணைந்து கிட்டங்கிகள் அமைக்க முன்வரும் விவசாயிகளுக்கு, வங்கிகள் மட்டுமின்றி மாவட்ட நிர்வாகமும் உதவிட தயாராக உள்ளது என்று தெரிவித்தார். இந்த கலந்தாய்வில் நபார்டு வங்கி மேலாளர் சுப்ரமணியன், ஐ.ஓ.பி., முதன்மை பொதுமேலாளர் வரதராஜன், வேளாண் இணை இயக்குனர் சேகர், மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் ராமலிங்கம் உட்பட பலர் பங்கேற்றனர்.

## <u>மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி</u>

வருஷநாடு : கடமலை-மயிலை ஒன்றியத்திற்கு உட்பட்ட கண்டமனூர், கடமலைக்குண்டு, சிங்கராஜபுரம், முருக்கோடை உட்பட பல பகுதிகளில் சுமார் பத்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் மானாவாரி விவசாயம் நடைபெறு கிறது. இதில் மொச்சை, கட்டான், மக்கச்சோளம் உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் தங்களது நிலத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பயிரிட்டிருந்தனர். போதிய மழை இல்லாததால் பயிர்கள் காய்ந்து கருகி

வந்தது. இந்நிலையில் கடந்த மூன்று தினங்களாக மழை பெய்து வருவதால் மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மூலிகை தாவரங்களை காக்க வேண்டுகோள்

ராமநாதபுரம் : "மருத்துவ குணம் கொண்ட அரிய வகை மூலிகை தாவரங்களை காக்க வேண்டும்,' என சித்த மருத்துவ துறையினர் தெரிவித்தனர். ராமநாதபுரம் மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் பார்த்திபன், டாக்டர் ஸ்ரீமுகநாகலிங்கம் ஆகியோர் கூறுகையில், "இந்தியாவில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மூலிகை தாவரங்கள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் தமிழகத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரிய வகை தாவரங்கள் உள்ளன. அசோகு, கல்வாழை, கொடம்புளி, நோணி பழம் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட அரிய தாவரங்கள் அழிந்து வருகின்றன. நெல்லை, செங்கோட்டை, புதுக்கோட்டை, புனலூர், காண்டீபம் உள்ளிட்ட பகுதிகளில் அரிய வகை மூலிகை தாவரங்கள் தனியார் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன. நோய் தீர்க்கும் மூலிகை மருத்துவ குணங்களை பாடப்புத்தங்களில் மட்டுமே படிக்க முடிகிறது. அழிவின் விளிம்பில் உள்ள அரிய மூலிகை தாவரங்களை பாதுகாக்க வேண்டும்,' என்றனர்.

## குமரி மாவட்டத்தில் சாரல்மழை நீடிப்பு

நாகர்கோவில்: குமரி மாவட்டத்தில் சிறிய இடைவெளிக்கு பின்னர் கடந்த சில நாட்களாக சாரல்மழை பெய்து வருகிறது. அணை பகுதிகளிலும், மலையோர கிராமங்களிலும் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணைகளுக்கு நீர் வரத்து சீராக இருந்து வருகிறது. நேற்று காலை வரை உள்ள நிலவரப்படி திருவட்டாரில் அதிக பட்சமாக 24 மிமீ மழை பதிவானது. அடையாமடையில் 21 மிமீ மழை பதிவானது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 30.30 அடியாகவும், பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 68.15 அடியாகவும் உள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>சுற்றுலா பயணிகள் உற்சாகம்</u>**

## ஊட்டியில் 2ம் சீசனை முன்னிட்டு மலர்களால் உருவான முயல்



ஊட்டி: நீலகிரியில் கடந்த 1ம் தேதி முதல் இரண்டாம் சீசன் துவங்கியுள்ளது. இதையொட்டி, ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் உள்ள 2 லட்சம் மலர் செடிகளில் டேலியா, டெல்பீனியம், இன்காமேரிகோல்டு, பிரஞ்சுமேரிகோல்டு, பேன்சி, பெகோனியா, டெய்சி, காலண்டுலா, டயான்தஸ், ஆஸ்டர், பிரிமுலா, பால்சம், சைக்லமன் உள்ளிட்ட பல வகை மலர்கள் பூக்குக் குலுங்குகின்றன. இதுதவிர கார்னேசன் மலர்களை கொண்டு பூங்கா மாடத்திற்கு செல்லும் நுழைவு வாயில் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மேலும், பல ஆயிரம் கார்னேசன் மலர்களை கொண்டு முயல் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. இந்தநிலையில், இலையுதிர்கால திருவிழா மற்றும் மலர் அலங்காரம் ஆகியவைகளின் துவக்க விழா நேற்று மரவியல் பூங்காவில் நடந்தது. விழாவில் தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் மணி, மாவட்ட கலெக்டர் சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விழாவில், தோடர் மற்றும் படுகர் இன மக்களின் பாரம்பரிய நடன நிகழ்ச்சிகள், பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடந்தன. இதனை உள்ளூர் மக்கள் மட்டுமின்றி சுற்றுலா பயணிகள் பலர் கண்டு ரசித்தனர். கலெக்டர் சங்கர் கூறுகையில், 'இரண்டாம் சீசனுக்கு நீலகிரி வரும் சுற்றுலா பயணிகள்

கண்டுகளிக்கும் வகையில் இம்முறை பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 5ம் தேதி வரை இந்த மலர் அலங்காரங்கள் காட்சிக்கு வைக்கப்படும் என்றார்.

## புரட்டாசி எதிரொலி முட்டை விலை 10 காசு குறைந்தது




நாமக்கல்: புரட்டாசி மாதம் எதிரொலியால் நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 10 காசு குறைந்துள்ளது.நாமக்கல்லில், 'தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு' கூட்டம் நேற்று நடந்தது. பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் பங்கேற்று சந்தை நிலவரம் குறித்து ஆலோசித்தனர்.புரட்டாசி மாதம் பிறந்துள்ளதால் முட்டை விற்பனை தமிழகத்தில் பரவலாக குறைந்துள்ளதாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.இதையடுத்து, முட்டை விலையில் 10 காசு குறைத்து முட்டையின் பண்ணைகொள்முதல் விலை 340 காசில் இருந்து 330 காசாக நிர்ணயிக்கப்பட்டது.மற்ற மண்டலங்களில் நேற்று நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை விபரம் (காசுகளில்): சென்னை 375, பெங்களூர் 365, மைசூர் 365, ஐதராபாத் 340, மும்பை 380, விஜயவாடா 329, டெல்லி 334, பர்வாலா 317. பசுமாடுகள் விற்பனை வேலார், : பொய்கையில் நேற்று நடந்த மாட்டுச்சந்தையில் பசுமாடுகள் அதிகபட்சமாக ரூ.70 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. வேலூர் அடுத்த பொய்கை மாட்டுச்சந்தை வழக்கம்போல் நேற்று அதிகாலை 5 மணியளவில் தொடங்கியது. இங்கு பல்வேறு ரகங்களில் 1000க்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டன. இதில் பசுமாடு ரூ.20 ஆயிரம் முதல் ரூ.75 ஆயிரம் வரையிலும், எருது மாடுகள் ரூ.25 ஆயிரம் முதல் ரூ.70 ஆயிரம் வரையிலும், எருமை மாடுகள் ரூ.18 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

**காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

பென்னாகரம், : காவிரி நீர் பிடிப்பு பகுதிக ளான அஞ்செட்டி, கொள் ளேகால், பிலிகுண்டுலு பகுதிகளில் கடந்த இரு தினங்களாக மழை பெய்து வரு கிறது. இதன் காரணமாக நேற்று முன்தினம் ஒகேனக் கல்லுக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. நேற்று முன் தினம் 5700 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 6300 கன அடியாக அதிகரித்துள்ளது. மேலும் மழை விட்டு விட்டு மழை பெய்து வருவதால் நீர் வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், புரட் டாசி மாதம் என்பதால், ஒகேனக்கல்லுக்கு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை வழக்கத்தை காட்டிலும் குறைவாகவே உள்ளது. அதிலும் சிலர் அசைவ உணவுகளை தவிர்ப்பதால், சிக்கன், மட்டன், மீன் கடை கள் வியாபாரமின்றி காற்று வாங்குகின்றன. இதனிடை யே, வரும் 2ம் தேதி ஆயுத பூஜைக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிக்கும் என எதிர்ப்பு நிலவுகிறது.

**தக்காளி விலை திடீர் சரிவு வெங்காயம், பச்சை மிளகாய் ஏறுமுகம்**

திருச்சி: திருச்சியில் சில்லரை கடைகளில் தக்காளி விலை இறங்குமுகமாக இருந்து வந்தாலும் சின்ன வெங்காயம் மற்றும் பச்சை மிளகாய் விலை தொடர்ந்து ஏறுமுகமாக இருந்து வருகிறது.திருச்சி காந்திமார்க்கெட்டுக்கு ஊட்டி, கொடைக்கானல், கர்நாடகா, பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து இங்கிலீஸ் காய்கறிகள் வருகின்றன. பின்னர் இந்த காய்கறிகள் பெரம்பலூர், தஞ்சை, புதுகை மற்றும் சுற்றுப்புற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதேபோல் மணப்பாறை, ஆலம்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து நாட்டு காய்கறிகள் தினமும் திருச்சிக்கு கொண்டு வரப்படுகிறது.திருச்சி மாவட்டத்தில் சில்லரை கடைகளில் கடந்த மாதம் கிலோ ரூ.45க்கு விற்ற தக்காளி ரூ.15க்கும், ரூ.60க்கு விற்ற அவரைக்காய் ரூ.50க்கும், ரூ.35க்கு விற்ற முள்ளங்கி ரூ.25க்கும், ரூ.80க்கு விற்ற கருணைக்கிழங்கு ரூ.65க்கும், ரூ.25க்கு விற்ற கோஸ் ரூ.18க்கும், ரூ.40க்கு விற்ற பீட்ரூட் ரூ.28க்கும், ரூ.40க்கு விற்ற பல்லாரி ரூ.28க்கும், ரூ.35க்கு விற்ற வெண்டைக்காய் ரூ.25க்கும்,

ரூ.120க்கு மாங்காய் ரூ.70க்கும் விலை குறைந்து விற்கப்பட்டு வருகிறது. இதேபோல் ஒரு சில காய்கறிகளின் விலை குறையாமல் ஒரு கிலோ கத்திரிக்காய் ரூ.35க்கும், உருளை ரூ.45க்கும், சின்ன வெங்காயம் ரூ.40க்கும், பச்சை மிளகாய் ரூ.40க்கும், பீன்ஸ் ரூ.40க்கும், சேனை ரூ.35க்கும், முருங்கை ரூ.50க்கும், இஞ்சி ரூ.120க்கும், காலிபிளவர் ரூ.25க்கும், ஒரு தேங்காய் ரூ.20க்கும், ஒரு வாழைப்பூ ரூ.5 வரையிலும், வாழத்தண்டு ரூ.10 வரையிலும் விற்கப்பட்டு வருகிறது. புரட்டாசி மாதத்தில் ஒருசில காய்கறிகளின் விலை சற்று குறைந்தும், மற்ற காய்கறிகள் ஏறுமுகத்திலும் இருந்தாலும் சின்ன வெங்காயம், இஞ்சி, முருங்கைக்காய், கேரட், பீன்ஸ், கருணை, அவரை, உருளை, பச்சை மிளகாய் உள்ளிட்ட காய்கறிகள் மட்டும் தொடர்ந்து ஏறுமுகமாகவே இருந்து வருகிறது என சில்லரை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

**<u>துறையூர் ஒழுங்குமுறை கூடத்தில் 2,917 கிலோ சின்ன வெங்காயம் ஏலம்</u>**

திருச்சி: துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த ஏலத்தில் 2,917 கிலோ சின்ன வெங்காயம் மறைமுகம் ஏலம் விடப் பட்டது. இதில் ஒரு கிலோ ரூ.15.50க்கு போனது. திருச்சி மாவட்டம் துறையூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடக்கில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் சின்ன வெங்காயம் மறைமுக ஏலம் புதன்கிழமைதோறும் கடந்த 11 வாரமாக நடைபெற்று வருகிறது. நேற்று நடந்த மறைமுக ஏலத்தில் துறையூர் வெங்கடாஜலபுரம், காட்டம்பட்டி, பகளவாடி, சிக்கத்தம்பூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 41 மூட்டை சின்ன வெங்காயத்துடன் 7 விவசாயிகள் பங்கேற்றனர். இதேபோல் பெரம்பலுர்ீர், பாடலூர், துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 17 வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர். மொத்தம் ரூ.33, 892 மதிப்பில் 2,917 கிலோ சின்ன வெங்காயம் ஏலம் போனது. இதில் தரமான வெங்காயம், அதிக பட்சமாக ஒரு கிலோ ரூ.15.50க்கும், சராசரியாக கிலோ ரூ.12க்கும் ஏலம் போனது. இடைத்தரகர்கள் இன்றி, கமிஷன் இல்லாமல் விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணமும் பட்டுவாடா செய்யப்பட்டது. மேலும் அடுத்தவாரம் புதன்கிழமை தொடர்ந்து சின்ன வெங்காயம் ஏலம்

நடைபெற உள்ளதால் இருப்பில் வைத்துள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை கொண்டு வந்து மறைமுக ஏலத்தில் கலந்து கொள்ளும்படியும், வெங்காயத்திற்குரிய பணத்தையும் உடனே பெற்றுக் கொள்ளலாம் என வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் கேட்டுக் கொண்டார்.

**<u>பழநி அருகே மக்காச்சோள சாகுபடி கருத்தரங்கம்</u>**

பழநி, : பழநி அருகே சக்கிரப்பட்டியில் நபார்டு வங்கி மற்றும் கிருபா அறக்கட்டளை சார்பில் உழவர் மன்ற துவக்க விழா மற்றும் மக்காச்சோள சாகுபடி குறி த்து கருத்தரங்கம் நடந்தது. நபார்டு வங்கி துணை பொதுமேலாளர் சஞ்சீவி தலைமை வகித்தார். கருத்தரங்கில் உழவர் மன்றத்திற்கு, வங்கிகளின் மூலம் வழங்கப்படும் சலுகைகள் மற்றும் கிட்டங்கள் குறித்து பேசப்பட்டது. திண்டுக்கல் காந்தி கிராம தொழில்நுட்ப வல்லுநர் ஜாகிர்தாஸ் உயர்ந்த ரத மக்காச்சோள சாகுபடி குறித்து செயல்முறை பயிற்சி அளித்தார். கருத்தரங்கில் வாழ்நாள் கல்விதிட்ட ஒருங்கிணைப்பாளர் ஐயப்பன், கிருபா அறக்கட்டளை நிறுவனர் சுஜாதா, கடன் அலுவலர் சாமுவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**<u>உழவர் பாதுகாப்புத்திட்ட உறுப்பினர்களுக்கு நிதியுதவி</u>**

திண்டுக்கல், : உழவர் பாதுகாப்புத்திட்ட உறுப்பி னர்களுக்கு திருமணம், விபத்து, மரணம், மேற்படிப்பு உள்ளிட்ட பல்வேறு வகையான நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன. தகுதியுடையவர்கள் உடன் விண்ணப்பிக்கலாம் தமிழக அரசின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் உழவர் பாதுகாப்புத்திட்ட உறுப்பினர்கள் மற்றும் அவர் களை சார்ந்தோர்க்கு பல்வேறு நிதியுதவிகள் வழங்கப்படு கிறது. இதன்படி ஆண் உறுப்பினர்களின் திருமண உதவி யாக ரூ.8ஆயிரமும், பெண் உறுப்பினர்களுக்கு திருமண உதவியாக ரூ.10ஆயிரமும் வழங்கப்படுகிறது. இதேபோல் உறுப்பினர்களின் மகன் திருமண உதவியாக ரூ.8ஆயிரமும், உறுப்பினர்களின் மகள் திரு மண உதவியாக ரூ.10ஆயிரமும் வழங்கப்படுகிறது. விப த்து மரணத்திற்கு ரூ.ஒரு லட்சம்,

செயல்பட முடியாத அளவிற்கான இழப்பு அதாவது விபத்தில் இரண்டு கை கள் அல்லது இரண்டு கால்கள் அல்லது ஒரு கை மற்றும் ஒரு கால் அல்லது மீட்க முடியாத அளவிற்கு கண்கள் இரண்டிலும் பார்வை இழத்தல் போன்றவற்றிற்கு ரூ.ஒரு லட்சமும் வழங்கப்படும். இதேபோல் ஒரு கை, ஒரு கால் அல்லது பக்கவாதம், மேலே குறிப்பிட்ட பாதிப்புகள் அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக கை, கால்களை இழத்தல் போன்றவற்றிற்கு ரூ.50ஆயிரமும், இயற்கை மரணத்திற்கு ரூ.10 ஆயிரம், ஈமச்சடங்கிற்கு ரூ.2,500ம், தற்காலிக இயலாமையால் பாதிக்கப்பட்டோர்க்கு (எச்ஐவி, டிபி, கேன் சர், டயாலிசிஸ்) உதவித் தொகை ரூ.ஆயிரம் வழங்கப் படும். ஹெச்ஐவி.யால் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்த அனாதை குழந்தைகளுக்கு மாதாந்திர உதவித் தொகை ரூ.ஆயிரமும் வழங்கப்படுகிறது. உறுப்பினர்களின் குழந்தைகள் மேற்படிப்பிற்காக கல்வி உதவித்தொகை ரூ.1250 முதல் ரூ.6750வரை வழங்கப்படுகிறது. எனவே இத்திட்டத்தின்கீழ் உறுப்பினராக பதிவு செய்யப்பட்டவர்கள் மேற்கண்ட நிதியுதவிகள் பெற்று பயனடையலாம். மேலும் விபரங்களுக்கு சமூக பாதுகாப்புத்திட்ட தனி வட்டாட்சியர்கள், சமூக பாதுகாப்புத்திட்ட துணை ஆட்சியரை நேரிலோ (0451) 2461767 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என்று கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

## விதை நெல்லை மிச்சப்படுத்த நேரடி நெல் விதைக்கும் கருவி வேளாண் விஞ்ஞானிகள் தகவல்

காரைக்குடி: நேரடி நெல் விதைக்கும் கருவியில் விதைப்பதன் மூலம் 40 சதவீதம் விதைகள் மிச்சப்படுத்தலாம் என செட்டி நாடு மானாவாரி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். விவசாயிகள் டிராக்டர், நாட்டு கலப்பைகளைக் கொண்டு விதைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது உள்ள நிலையில் கால்நடைகள் மற்றும் கூலியாட்கள் பற்றாக்குறையால் காலம் தாழ்த்தி பயிர் செய்கின்றனர். இதனால் மகசூல் குறைகிறது. இம்முறையில் நெல்லை சாகுபடி செய்வதால் அதிகமான விதைகள் தேவைப்படுவதோடு, முறையற்ற பயிர் இடைவெளியின் காரணமாக உழவியல்

நடைமுறைகளை செயல்படுத்த முடியாத நிலை உள்ளது. இப்பிரச்சனைகளை நிவர்த்தி செய்ய காரைக்குடி அருகே செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் கூறுகையில். விதைப்பு கருவியின் மூலம் குறைந்த செலவில், குறைந்த வேலையாட்களை கொண்டு ஒரு ஏக்கர் நிலத்தை 45 நிமிடங்களில் விதைப்பு செய்யலாம். ஏக்கருக்கு ரூ.500 வரை மிச்சமாகும். தவிர இதன் மூலம் பயிர் செய்யும் போது 40 சதவீத விதை களை மிச்சப்படுத்த முடியும். பயிர்களுக்கிடையே சரியான இடைவெளி பராமரிக்கப்படுவதால் சீரான விகிதத்தில் சத்துக்கள் கிடைக்கும். நேரடி நெல் விதைப்பில் விதைத்த 3 முதல் 8 நாட்களுக்குள் ஏக்கருக்கு பிரிட்டிலாகுளோர் 175 கிராம் அல்லது பென்டிமெத்தலின் 400 கிராம் வீதம் 25 கிலோவை மணலுடன் கலந்து வயலில் போதுமான ஈரப்பதம் இருக்கும் போது தெளிக்க வேண்டும். இதன்மூலம் களை மற்றும் புல் கட்டுப்படுத்தப்படும். மேலும் விதைத்த 25வது நாளில் களையை கட்டுப்படுத்த டி.இ.இ சோடியம் உப்பை ஏக்கருக்கு 200 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பயிர்வளர்ந்த 15 முதல் 20வது நாளில் ஏக்கருக்கு பிஸ்பைரிபேக் சோடியம் 10 கிராம் அல்லது அசிம்சல்பியூரான் 15 கிராம் என ஏதாவது ஒரு களைக் கொல்லியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைதெளிப்பானை கொண்டு சீராக தெளிக்க வேண்டும். இதன் மூலம் இலைக் களைகள் மற்றும் கோரை, புல் வகைகளை கட்டுப்படுத்தலாம். பெருகிவரும் வேலையாட்கள் பற்றாக்குறை மற்றும் அதிக இடுபொருட்கள் செலவினை இம்முறையின் மூலம் குறைக்கலாம் என்றனர்.

## <u>தென்னை விவசாயிகள் கவனத்திற்கு... சொட்டுநீர் பாசன வசதி ஏற்படுத்த 50 சதவீதம் அரசு மானியம்</u>

ராமநாதபுரம் :தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் சொட்டுநீர் பாசன கட்டமைப்பு ஏற்படுத்த வேளாண்மைத்துறை 50 சதவீதம் மானியம் வழங்குகிறது. இந்த வாய்ப்பை தென்னை விவசாயிகள் பயன்படுத்தி பலனடையலாம் என ஜவாஹிருல்லா எம்எல்ஏ வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:

ராமநாதபுரம் மாவட்டத்தில் புதுமடம், பெரியபட்டணம், வாலாந்தரவை, திருபுல்லாணி, தாமரைக்குளம் போன்ற பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னை விவசாயம் நடைபெறுகிறது. தற்போது நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. இதனால் தென்னை விவசாயம் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது. மேலும் கடந்த 2 வருடங்களாக பருவமழை பொய்த்துள்ளது. இதனால் தென்னை மரங்கள் கருகி பாழாகும் நிலை ஏற்பட்டுள்ளது. தென்னை விவசாயிகளின் நலன்கருதி தென்னையில் சொட்டுநீர் பாசனம் அமைக்க மாவட்ட கலெக்டரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தென்னையில் சொட்டுநீர் பாசனம் அமைத்திடும் தேசிய நீடித்த நிலையான வேளாண்மை திட்டம் 2014-15ம் ஆண்டிற்கு செயல்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் தென்னை விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் பாசன வசதி செய்துதர திட்டமிட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. எனவே, இதுதொடர்பாக வேளாண்மை உதவி இயக்குனரிடம் மனு அளிக்கவர்களுக்கு அரசு ஆணை கிடைக்கவுடன் பதிவுமூப்பு அடிப்படையில் சொட்டுநீர் பாசன வசதி கள் ஏற்படுத்தி தரப்படும் என வேளாண்மை இணை இயக்குனர் தெரிவித்துள்ளார். இதனால் மாவட்டத்தில் உள்ள தென்னை விவசாயிகள் வேளாண்மை இணை இயக்குனருக்கு சொட்டுநீர் பாசன வசதிகளை பெறுவதற்கான விண்ணப்பம் அளித்து பயன்பெறவேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இடி, மின்னலுடன் விடிய, விடிய மழை

சேலம், : சேலம் மாவட்டத்தில் பல பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை மற்றும் நள்ளிரவில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது. பல இடங்களில் மரங்கள் வே ரோடு சாய்ந்து, கிளை கள் முறி ந்து விழுந்தன. மாநகரத்தில் பல இடங்களில் வாகனங்கள் மண்ணுக்குள் புதைந்தன. தமிழகத்தில் பரவலாக கடந்த இரு நாட்களாக மழை பெய்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் மாலை, இரவு நேரங்களில் பலத்த மழை பெய்தது. நேற்றுமுன்தினம் மாலை 6 மணி முதல் மாவட்ட முழு வதும் இடி,

மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இம்மழை சுமார் ஒரு மணிநேரம் நீடித்தது. பின்னர் இரவு 11 மணியளவில் மீண்டும் பலத்த இடி, மின்னலுடன் மழை பெய்தது. இம்மழை அதிகாலை வரை நீடித்தது. பலத்த இடி, மின்னல் இருந்ததால் பல இடங்களில் மின்சா ரம் துண் டிக்கப்பட்டது. நகரில் பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தும், கிளை கள் முறிந்து விழுந்தன. பாதாள சாக் கடை திட்டம், டெலிபோன், மின் கேபிள் பதிக்கப்பட்ட இடங்களில் குண்டும், குழியுமாக இருப்ப தால், பல இடங்களில் வாகனங்கள் மண்ணுக்குள் புதைந்தன. சேலம் சிசி ரோட்டில் மழை க்கு மரம் வேரோடு விழுந்தது. அதே ரோட்டில் மணல் லாரி ஒன்று மண்ணுக்குள் புதைந்தது. சேலம் லைன்மேட்டில் பல வீடு களில் மழைநீர் சூழ்ந்தது. இத னால் அப்பகுதி மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். சேலம் வெண்ணங்கொடி முனியப்பன் கோயில் அருகேயுள்ள சேகோ சர்வ் அலுவலக சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது. மழையால் பழைய திருவள்ளுவர் பஸ் ஸ்டாண்ட், கருவா ட்டு பாலம், நாராாணயநகர், சித்தேஸ்வரா, அம்மாப்பேட்டை, செவ்வாய்பேட்டை, சத்திரம், பழைய பஸ் ஸ்டாண்ட், புதிய பஸ் ஸ்டாண்ட், அஸ்தம்பட்டி, தாதகாப்பட்டி உள்ளிட்ட பகுதி யில் சாலையில் மழை நீர் பெருக் கெடுத்து ஓடியது. பல இடங்களில் மழைநீர் சூழ்ந்தது. மேட்டூர், ஆத்தூர், வாழப் பாடி, ஓமலூர், மேச் சேரி, மல் லூர் உள்பட சேலம் மாவட்ட முழுவதும் பலத்த இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்தது. ஏற்காட்டில் கடந்த சில நாட் களாக மாலை நேரங்களில் மழை பெய்து வருகிறது. நேற்று மாலை 6 மணியள வில் ஏற்காட்டில் வானம் மேக கூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் விடிய, விடிய இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. மழையால் ஒரு சில மலைகிராமங்களில் மரக் கிளை கள் முறிந்து விழுந்ததால் மின் சாரம் துண்டிக்கப்பட்டது. வீடுகளில் வெள்ளம் மரங்கள் சாய்ந்தன மேட்டூர், ஆத்தூர், வாழப் பாடி, ஓமலூர், மேச் சேரி, மல் லூர் உள்பட சேலம் மாவட்ட முழுவதும் பலத்த இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்தது. ஏற்காட்டில் கடந்த சில நாட் களாக மாலை நேரங்களில் மழை பெய்து வருகிறது. நேற்று மாலை 6 மணியள வில் ஏற்காட்டில் வானம் மேக கூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் விடிய, விடிய இடி,

மின்னலுடன் பலத்த மழை பெய்தது. மழையால் ஒரு சில மலைகிராமங்களில் மரக் கிளை கள் முறிந்து விழுந்ததால் மின் சாரம் துண்டிக்கப்பட்டது. சேலம் பெரியபுதூர் அக்ரஹாரம் பகுதியை சேர்ந்தவர் மாரியம்மாள் (74). நேற்று முன்தினம் பெய்த மழையால், நேற்று நண்பகல் இவரது கூரை வீடு இடிந்து விழுந்தது. இதில் மாரியம்மாளுக்கு கை, காலில் பலத்த காயம் ஏற்பட்டது. அவரை அங்குள்ளவர்கள் மீட்டு சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். மழையளவு: சேலம் மாநகரில் 50.2 மில்லி மீட்டரும், ஏற்காட்டில் 30.2 மில்லி மீட்டரும், வாழப்பாடியில் 42.2 மில்லி மீட்டர், ஆத்தூரில் 55.4 மில்லி மீட்டரும், தம்மம்பட்டியில் 47.6 மில்லி மீட்டரும், கெங்கவல்லியில் 34.5 மில்லி மீட்டரும், வீரகனூரில் 29.3 மில்லி மீட்டரும், சங்ககிரியில் 8.2 மில்லி மீட்டர், இடைப்பாடியில் 31.8 மில்லி மீட்டரும், ஓமலூரில் 36 மில்லி மீட் டரும், மேட்டூரில் 11.8 மில்லி மீட்டரும் பதிவாகியுள்ளது.

## கரூர் அருகே நான்கு கால்களுடன் அதிசய கோழி குஞ்சு

கரூர்: கரூர் மாவட்டம் நெரூர் அருகே நான்கு கால்களுடன் நடமாடிய கோழிக்குஞ்சினை இப்பகுதி மக்கள் ஆர்வத்துடன் வந்து பார்வையிட்டனர். கரூர் மாவட்டம் நெருர் பகுதியை சேர்ந்தவர் மகாலிங்கம். இவரது மனைவி பத்மாவதி வளர்த்து வந்த கோழி கடந்த சில மாதங்களுக்கு முன்பு நான்கைந்து முட்டைகளை இட்டது. அந்த முட்டைகள் அனைத்தும் முறைப்படி பராமரிக்கப்பட்டு கோழியால் அடைகாக்க வைக்கப்பட்டது. கடந்த சில நாட்களுக்கு முன்பு அடைகாப்பு பகுதியில் இருந்து நான்கு குஞ்சுகள் வெளியே வந்தன. மற்ற மூன்று குஞ்சுகளும் வழக்கமான கோழிக்குஞ்சை போல இருந்தது. ஒரேயொரு கறுப்பு நிற குஞ்சு மட்டும் நான்கு கால்களுடன் தவழ்ந்து தவழ்ந்து நடைபோட்டது. இந்த அதிசய கோழி குஞ்சு குறித்து அருகில் உள்ள பொதுமக்களுக்கும் தகவல் பரவியது. இதனால், கடந்த இரண்டு நாட்களாக சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் இந்த நான்கு கால்களை கொண்ட கோழிக்குஞ்சினை ஆர்வத்துடன் பார்த்துச் சென்று வருகின்றனர்.

## விதை கிராமத் திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

வேதாரண்யம்: வேதாரண்யம் தாலுக்கா கத்தரிப்புலத்தில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு ஊராட்சி தலைவர் ராஜலெட்சுமி வீரமணி தலைமை வகித்தார். ஒன்றியக் கவுன்சிலர் சாந்தி சுப்பிரமணியன், கூட்டுறவு சங்கத் தலைவர் அபிமன்னன் முன்னிலை வகித்தனர். வேதாரண்யம் வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன், கரியாபட்டினம் உதவி வேளாண்மை அலுவலர் வேதரெத்தினம், வாய்மேடு உதவி வேளாண்மை அலுவலர் எழிலரசி, தாணிக்கோட்டகம் உதவி வேளாண்மை அலுவலர் ரவி ஆகியோர் தரமான விதை உற்பத்தி; தரமான விதை உற்பத்தியில் உயிர் உரங்கள் பங்கு, விதை உற்பத்தியில் உயிர் பூச்சிக்கொல்லி பங்கு குறித்து விளக்கினர். விதை உற்பத்திக்கு வேளாண்மை விரிவாக்க மையங்களில் உள்ள தேவையான விதை மற்றும் இதர இடுபொருட்கள் குறித்தும் எடுத்துரைத்தனர். பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் அருள்பிரகாசம், மோகன், இந்திரா திருமறைக்காடு இயற்கை விவசாயிகள் சங்க ராஜன், வளநாடு வேளாண் தற்காப்பு வேளாண்மை உற்பத்தியாளர் நிறுவன இயக்குனர் சாம்பசிவம் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். ஆறுமுகம் நன்றி கூறினார்.

## வடலூர் பகுதியில் கம்பு பயிர் அமோக விளைச்சல்

வடலூர்: குறிஞ்சிப்பாடி தாலுகாவில் பல பகுதிகளில் கம்பு பயிரிடப்பட்டுள்ளது. அவைகள் விளைந்து அறுவடை செய்யப்பட உள்ளது. நமது கலாசாரத்தில் கம்பு, கேழ்வரகு உள்ளிட்ட சிறுதானிய பயிர்களுக்கு முக்கியத்துவம் உண்டு. இதன் மூலம் தயாரிக்கப்படும் உணவு வகைகள் உடலுக்கு அதிக சக்தியை தரும். இவைகளுக்கு அடுத்த இடத்தை நெற்பயிர் வகித்தது. நாளடைவில் கம்பு, கேழ்வரகு பின்னுக்கு தள்ளப்பட்டு நெல் அரிசி முதல் இடத்தை பிடித்தது. அதுமுதல் மனித சமுகம் பல புதிய நோய்களுக்கு புகலிடமாக மாறிப்போனது. பெரும்பான்மையான விவசாயிகளும் தேவையை கருதி சிறுதானியத்திற்கு பதில் நெல் பயிரிட ஆர்வம் காட்டினர். சில

விவசாயிகள் மட்டும் தொடர்ந்து ஒரு சில பகுதியில் சிறு தானியங்களை பயிரிட்டு வந்தனர். தற்போது நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்க மீண்டும் கம்பு கேழ்வரகு பக்கம் வருகின்றனர். இதனால் விவசாயிகளும் இவற்றை பயிரிட ஆர்வம் செலுத்துகின்றனர். வடலுரை அடுத்த வடகுத்து, வடக்குமேலூர், வானாதிராயபுரம் உள்ளிட்ட கிராமங்களில் சுமார் 300க்கும் மேற்பட்ட ஏக்கர்களில் கம்பு பயிரிட்டுள்ளனர். மூன்று மாத கால பயிரான இதற்கு செலவும், பராமரிப்பும் மிகவும் குறைவு, ஆனால் நல்ல லாபம் கிடைக்கும் என விவசாயிகள் கூறுகின்றனர். இந்த பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள கம்பு நல்ல விளைச்சல் கண்டுள்ளது. தற்போது அவைகள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. படிப்படியாக இவைகள் அறுவடை செய்யப்பட்டு கதிரிலிருந்து கம்பு விதை பிரித்து எடுக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படும்.

## வாழைத்தார் விலை தொடர்ந்து உயர்வு

கோபி: கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம் தோறும் வாழை ஏலம் நடைபெறுகிறது. இந்த ஏலத்தில் கோபி, நம்பியூர், அத்தாணி, டி.என்.பாளையம், கள்ளிப்பட்டி, பங்களாபுதூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான விவசாயிகள் கலந்துகொள்கின்றனர். வாரம் இரு முறை நடைபெறும் ஏலத்தில் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வாழைத்தார்கள் வரை விற்பனைக்காக கொண்டு வரப்படும். இதில் நேற்று நடைபெற்ற ஏலத்தில் நேந்திரன் கிலோ ரூ.45க்கும், கதலி கிலோ ரூ.56க்கும், செவ்வாழை தார் ஒன்று ரூ.750க்கும், மொந்தன் ரூ. 500க்கும், பூவன் ரூ.650க்கும், ரஸ்தாளி ரூ.560க்கும், பச்சைநாடன் ரூ.420க்கும், ரொபஸ்டோ ரூ.420க்கும், தேன்வாழை ரூ.650க்கும் விற்பனையானது.கடந்த வாரத்தை விட நேந்திரன் மற்றும் கதலி ரக வாழை இந்த வாரம் கிலோ ஒன்றுக்கு ரூ. 6 வரையிலும், மற்ற ரக வாழைகள் தார் ஒன்றுக்கு ரூ.50 முதல் ரூ.75 வரையிலும் அதிகரித்துள்ளன. மொத்தம் 6 ஆயிரத்து 500 வாழைத்தார்கள் கொண்டு வரப்பட்டு, அவை 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது. அதே போன்று தேங்காய் ஏலத்தில் ஒரு தேங்காய் குறைந்தபட்சம் ரூ.10

முதல் அதிகபட்சமாக ரூ.18.30 வரை விற்பனையானது. நேற்றைய ஏலத்தில் 6 ஆயிரம் தேங்காய்கள் ரூ.90 ஆயிரத்திற்கு விற்பனையானது.

## மாவட்டத்தில் தொடர்ந்து 3வது நாளாக மழை

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகின்றது. அதிகபட்சமாக சிவகிரியில் 45 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக ஆங்காங்கே மழை பெய்து வந்த நிலையில் கடந்த 3 நாட்களாக தொடர்ச்சியாக பெரும்பாலான பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. குறிப்பாக மலைப்பகுதிகளான தாளவாடி, ஆசனூர், பர்கூர் உள்ளிட்ட பகுதிகளில் பெய்த மழையால் தடுப்பணைகளில் தண்ணீர் தேங்கி நிற்கின்றது. அதே வேளையில், பகலில் வெப்பத்தின் தாக்கமும் அதிக அளவில் உள்ளது. நேற்று முன்தினம் இரவு ஈரோடு, மொடக்குறிச்சி, சிவகிரி, கவுந்தப்பாடி உள்ளிட்ட பகுதிகளில் தொடர் மழை பெய்தது. மழையளவு: கவுந்தப்பாடி 7.8 மில்லிமீட்டர், மொடக்குறிச்சி 20 மில்லிமீட்டர், அரச்சலூர் 13 மில்லிமீட்டர், சென்னிமலை 7, சிவகிரி 45, கொடுமுடி 20, ஈரோடு 2 மில்லிமீட்டர் மழை பதிவாகி இருந்தது. இந்நிலையில் பவானிசாகர் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரிக்க தொடங்கி உள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 68.77 அடியாகவும், வரத்து 2806 கன அடியாகவும் இருந்தது. அணையில் இருந்து வாய்க்காலில் 2300 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. மழை காரணமாக பவானி ஆற்றில் தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

## பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம்

பாபநாசம்: பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம் நடந்தது. இதில் கும்பகோணத்தை சேர்ந்த 2 வணிகர்கள், உத்தமதான புரம், திருப்பாலத்துறை, தெற்கு நாயகன்பேட்டை, கோபுராஜபுரம், பாபநாசம், களஞ்சேரி, கோட்டைச்சேரி, சால போகம், மாலாபுரம் உள்ளிட்ட ஊர்களிலிருந்து 47 விவசாயிகள் பங்கேற்றனர். விற்பனைக்

கூட கண்காணிப்பாளர் (பொ) தாட்சாயினி, இள நிலை உதவியாளர் செந்தில்நாதன் முன்னிலையில் ஏலம் நடந்தது. ரூ.1.54 லட்சம் மதிப்பிலான பருத்தி அதிகப்பட்சமாக குவிண்டால் ரூ.4,429, சராசரியாக ரூ.4,212க்கு ஏலம் போனது.

**ஒரத்தநாட்டில் மீன் வளர்ப்பு பண்ணை வயல்வெளி பள்ளி**

ஒரத்தநாடு: ஒரத்தநாடு வட்டாரத்தில் அட்மா திட்டத்தின்கீழ் மீன் வளர்ப்பு மற்றும் மீன் குஞ்சி உற்பத்தி தொடர்பாக பண்ணை வயல்வெளி பள்ளி கண்ணந்தங்குடி மேலையூரில் உள்ள செந்தில்நாதன் மீன் வளர்ப்பு குளத்தில் நடத்தப்பட்டது.பண்ணை பள்ளியை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகர் துவக்கி வைத்தார். ஒரத்தநாடு வேளாண்மை உதவி இயக்குனர் பாலசரஸ்வதி வரவேற்றார். வேளாண்மை மத்திய திட்ட வேளாண்மை துணை இயக்குனர் ராமதாஸ், அட்மா திட்ட வேளாண்மை துணை இயக்குனர் கிருஷ்ணகுமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர் சொக்கலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்த பயிற்சியில் மீன் வளர்ப்பு பற்றி குளம் அமைக்கும் முறை, மீன் ரகங்கள், தீவனங்கள் மற்றும் மீன் குஞ்சி உற்பத்தி முறை பற்றி விவசாயிகளிடம் எடுத்துரைத்தனர். பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளையும் மீன் வளர்ப்பு செய்ய வேண்டு மென கேட்டு கொண்டார். பண்ணை வயல்வெளி பள்ளியில் கண்ணந்தங்குடி மேலையூர், கக்கரை, ஆம்பலாப்பட்டு கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.ஏற்பாடுகளை அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் முத்துகுமரன், தொழில்நுட்ப வல்லுனர்கள் லோகநாதன், கண்ணன் செய்திருந்தனர்.

**வாடிப்பட்டி பகுதியில் வருணன் கருணை உழவு பணிகள் உற்சாகமாக துவக்கம்**

வாடிப்பட்டி, : வாடிப் பட்டி பகுதியில் கடந்த 3 நாட்களாக பெய்து வரும் மழையால் விவசாய பணி கள் தீவிரமடைந்துள்ளன. வாடிப்பட்டி மற்றும்

அதன் சுற்றுப்புற கிராமப்பகுதிகளான நீரேத்தான், மேட்டுநீரேத்தான், போடிநாயக்கன்பட்டி, ஆண்டி பட்டி, கட்டக்குளம் உள் ளிட்ட பகுதிகளில் முல்லை பெரி யாறு பிரதான கால் வாய் மூலம் முதல்போக நெல்சாகுபடி பணிகள் துவங்கி நடந்து வருகிறது. இப்பகுதியில் மாதக்கணக்கில் விளைநிலங்களில் நீர் செல் லாமல் கிடந்தது. தண்ணீர் செல்லும் வாய்க்கால்களும் புதர் மண்டி கிடந்தன. இப்பகுதி பாசன வசதிக்காக கடந்த 3ம் தேதி வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இருப்பினும் ஒரு சில கடைமடை நிலப்பகுதிகளுக்கு நீர் செல்லவில்லை. இதனால் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டன. தங்கள் நிலங்களில் தண்ணீர் எப்போது வரும் என விவசாயிகள் காத்திருந்தனர். மண் பார்த்த விவசாயிகளை வானம் பார்த்துக் கொண்டது. விளைவு... கடந்த 3 நாட்களாக மாலை நேரத்தில் மழை பெய்து வருகிறது. இதனால் தண்ணீரே படாமல் காய்ந்து கிடந்த கடை மடை விவசாய நிலப்பகுதிக்கு தண்ணீர் செல்ல ஆரம்பித்தது. இதற்கு மேலும் காத்திருப்பார்களா விவசாயிகள்... உடனடியாக களமிறங்கி வரப்பு வாய்க்கால் வெட்டுதல், பரம்பு அடித்தல் மற்றும் உழவு பணிகளை தீவிரமாக துவக்கி உள்ளனர். இதுகுறித்து விவசாயி கொங்கியப்பன் கூறுகையில், கடந்த சில நாட்களாக பெய்த மழையால் காய்ந்து கிடந்த நிலங்களில் தண்ணீர் வர துவங்கி உள்ளது. இனி கடை மடை பகுதி நிலங்களுக்கு தண்ணீர் வேகமாக பாயும் என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மானிய விலையில் சோளத்தட்டு வெட்டும் எந்திரம் வழங்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை**

மானிய விலையில் சோளத்தட்டு வெட்டும் எந்திரம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கறவை மாடுகள் சுல்தான்பேட்டை ஒன்றி யத்தில் கால்நடை வளர்ப்பு தொழில் பிரதானமாக உள் ளது. ஒன்றியத்தில் 10 ஆயிரத் திற்கும் மேற்பட்ட கறவை மாடுகள் உள்ளன. தினமும் சுமார் 1லட்சம் லிட்டர் வரை பால் உற்பத்தி செய்யப்படுகிறது. மாடுகளுக்கு பசுந்தீவனமும், அதிக அளவு உலர் தீவனமும் உணவாக வழங்கப்படுகிறது. இதற்காக விவசாயிகள் மக்காச்சோளம், சோளம் பயிர்களை அதிகளவில் சாகுபடி செய்து வருகிறார்கள். இதில் சோளத்தட்டுக்கள் கால்நடைகளுக்கு முக்கிய உணவாக வழங்கப்படுகிறது. மக்காச்சோளம், சோளம் பயிர்களின் தட்டுக்கள் கடின மாக இருப்பதால் மாடுகளால் நன்றாக கடித்து உண்ண முடிவதில்லை. வெறும் இலை களை மட்டும் உட்கொள் கின்றன. இதன் காரணமாக 70 சதவீதம் தீவன தட்டுக்கள் மாடுகள் உண்ணாமல் வீணா கின்றன.

எந்திரம்

இதன் எதிரொலியாக தீவன பற்றாக்குறை ஏற்பட்டு கால்நடை வளர்ப்பு தொழில் பாதிப்பு அடைகின்றன.இதற்கு தீர்வாக மாடுகள் உண்ணும் வகையில் சோளத் தட்டுக் களை வெட்டுவதற்கு ஒரு எச்.பி. மோட்டாரில் கத்தி யுடன் கூடிய எந்திரம் உள்ளது. இவை வேளாண் பொறியியல் துறை மூலம் 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. சுல்தான் பேட்டை வட்டாரத்தில் ஆயிரக்கணக்கான விவசாயி கள் உள்ள நிலையில் சில விவ சாயிகளுக்கு மட்மே இந்த எந்திரம் வழங்கப்பட்டுள் ளது. எந்திரத்தின் மதிப்பு ரூ.20 ஆயிரம் ஆகும். தற்போது கால்நடை தீவனம் விலை உயர்வு, பராமரிப்பு செலவு போன்ற காரணங்களால் கறவை மாடு வளர்ப்பு விவசாயிகள் முழு விலை கொடுத்து சோளத்தட்டு வெட்டும் எந்திரத்தை வாங்க முடிய வில்லை. அரசு 50 சதவீதம் மானியத் தில் எந்திரம் வழங்கினாலும், எந்திரம் கேட்கும் அனைத்து விவசாயிகளுக்கும் உடனடி யாக வழங்குவதில்லை அவ்வப்போது ஒரு சில விவசாயிகளுக்கே வழங்கி வருகின்றனர். சுல்தான்பேட்டை ஒன்றியப் பகுதியில் தொடர்ந்து நிலவி வரும் மழை குறைவு, தீவன பற்றாக்குறை ஆகியவற்றை கணக்கில் கொண்டும் பால் உற்பத்தி தொடர்ந்து சரிவை நோக்கி செல்வதை தடுக்கும் வகையிலும் சோளத்தட்டு வெட்டும் எந்திரம் அனைத்து விவசாயிகளுக்கும் உடனடி

யாக மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**<u>புதூர் ஏரியில் திடீரென தோன்றிய நீரூற்று</u>**



பென்னாகரம் அருகே புதூர் ஏரியில் திடீர் நீருற்று ஏற்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

பென்னாகரம் பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால் புதூர் ஏரி யில் திடீரென நீருற்று ஏற்பட்டுள்ளது. இதனை ஏராளமான பொது மக்கள் ஆச்சரியத் துடன் பார்த்து செல்கின்றனர்.

தொடர் மழை

தமிழகம் முழுவதும் பல் வேறு மாவட்டங்களில் பரவலாக கனமழை பெய்து போனது. இதனால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு ஆங் காங்கே பொதுமக்கள் பல் வேறு போராட்ட ங்களில் நடத்தி வருகின்ற னர். மேலும் மழை வேண்டி, பல்வேறு கிராமங்களில் பொதுமக்கள் சாமிக்கு சிறப்பு வழிபாடு நடத்தினர். மேலும் பெண்கள் ஏரிக்கரையில் ஒப்பாரி வைத்து வருண பகவானுக்கு மழை வேண்டி நூதன வழிபாடு நடத்தினர்.

இந்த நிலையில் கடந்த சில நாட் களாக மாவட்டம் முழு வதும் ஆங்காங்கே லேசான மழை பெய்து வருகிறது. இத னால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த 3 நாட்களாக பென்னாகரம் ஒன்றியத்திற் குட்பட்ட ஏரியூர், பெரும்பாலை உள்ளிட்ட பகுதிகளில் தொடர் மழை பெய்து வருகிறது.

ஏரியில் திடீர் நீருற்று

பலத்த மழை பெய்து வருகிறது. 23-ந் தேதி பென்னா கரம் பகுதியில் 48 மில்லி மீட்டரும், 24-ந்தேதி 23 மில்லி மீட்டரும், 25-ந்தேதி 24 மில்லி மீட்டரும் மழை பெய்துள்ளது. இதனால் அந்த பகுதியில் உள்ள ஏரி, குளங்கள், குட்டை கள் வேகமாக நிரம்பி வரு கின்றன. மேலும் கிணறு களில் நீர்மட்டம் உயரத் தொடங்கி யது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி

அடைந்துள்ளனர். இந்தநிலையில் பென்னா கரம் அருகே உள்ள சிக்கனம் பட்டி புதூர் ஏரிக்கு கடந்த சில நாட்களாக பெய்த கன மழையால் தண்ணீர் வரத் தொடங்கியது. கடந்த 3 நாட் களாக இந்த ஏரியில் திடீர் நீரூற்று தோன்றி ஏரி கிடுகிடு வென நிரம்பி வருகிறது. ஏரி யின் நடுவில் இருந்து தண்ணீர் குபுகுபுவென வெளி யேறு வதை அறிந்த ஆயிரக் கணக்காக பொதுமக்கள் தின மும் வந்து ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர். அப்போது கடந்த 3 நாட் களாக பென்னாகரம் பகுதி யில் பலத்த மின் னலுடன் மழை பெய்தது. அப் போது ஏற்பட்ட மின்னலின் போது ஏரியில் மின்னல் தாக்கி உள்ளது. இதனால் ஏரியில் நீரூற்று ஏற்பட் டுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

**<u>கொடைக்கானலில் பலத்த மழை வெள்ளிநீர்வீழ்ச்சியில் வெள்ளப்பெருக்கு</u>**



கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கடந்த 3 நாட்களாக இரவு நேரங்களில் பலத்த மழை பெய்து வந்தது. இந்த நிலையில் நேற்று மாலை 4.30 மணிக்கு கொடைக்கானல் நகர் பகுதிகளில் மற்றும் மேல்மலை கிராமங்களில் பலத்த மழை பெய்தது. இந்த மழை சுமார் 1½ மணி நேரம் நீடித்தது. பள்ளி மாணவ, மாணவிகள் மழையில் நனைந்தபடியே வீடு திரும்பினர். பலத்த மழைக்கு வெள்ளி நீர்வீழ்ச்சி, பாம்பார் நீர்வீழ்ச்சி, பியர்சோழா நீர்வீழ்ச்சி ஆகியவற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து கொட்டியது. இந்த மழையால் மாலை நேரத்தில் குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது.

**<u>வேலூரில் 44 மில்லிமீட்டர் மழை</u>**



வேலூர், வேலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த நிலையில்வேலூாரில் நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் பலத்த மழை பெய்தது. இதேபோல் குடியாத்தம், வாலாஜா, ஆற்காடு உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இதனால் சாலைகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. வேலூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழையின் அளவு மில்லி மீட்டரில் வருமாறு:– வேலூர் –44, ஆற்காடு –21.4, வாலாஜா –17, குடியாத்தம் –16.2, ஆலங்காயம் –10, மேல்ஆலத்தூர் –8.2, ஆம்பூர் –2.2, வாணியம்பாடி –1.6.